**ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 17 கமநல சேவை குழுக்கள - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 17 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 17 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 01 குழுவுக்காக பாதமான அபிப்பிராயம் மற்றும் 16 குழுக்குகளுக்காக முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வலஸ்முல்ல கமநல சேவை குழுவின் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,845,981 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் சரியாக காண்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 12 கமநல சேவை குழுக்களில் மீளாய்வாண்டிற்குரிய பல்வேறு விடயங்களுக்கான செலவுகள் ரூபா 1,672,277 தொகை மிகையாக மற்றும் ரூபா 673,425 தொகை குறைவாகவும் 08 கமநல சேவைக் குழுக்களின் பல்வேறு விடயங்களுக்குரிய வருமானம் ரூபா 317,113 தொகை குறைவாகவும் மற்றும் ரூபா 1,263,365 தொகை மிகையாவும், 16 கமநல சேவைக் குழுக்களின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,799,778 தொகை குறைவாகவும் மற்றும் ரூபா 422,564 தொகை மிகையாகவும், 08 கமநல சேவைக் குழுக்களின் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 76,048 தொகை குறைவாகவும், மற்றும் ரூபா 3,483,160 | இந்த வழுக்கள் 2024 ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கு ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவுகள் சீராக்கல் மேற்கொள்வதற்கும், நிதிக்கூற்றுக்கள் முழுமையாக மற்றும் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மிகையாகவும், 11 கமநல சேவைக் குழுக்களின் திரண்ட நிதியம் ரூபா 1,845,100 தொகை குறைவாக மற்றும் ரூபா 304,638 தொகை மிகையாகவும், 08 கமநல சேவைக் குழுக்களின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 2,585,889 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | 15 கமநல சேவைக் குழுக்களின் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,541,186 தொகை குறைவாகவும் மற்றும் ரூபா 54,000 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் குழு அமைந்துள்ள காணிகளின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையங்களின் காணிகள் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என மற்றும் ஏனைய வழுக்கள் 2024 ஆண்டு கணக்கு அறிக்கைளில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குழுவுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்கள் முழுமையாக மற்றும் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெலிஅத்த கமநல சேவை குழுவினால் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கடன் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த ரூபா 3,431,875 தொகை பெறுமதியான உர இருப்பொன்றிற்காக கொடுப்பனவு செய்யும் போது கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரமின்றி குழுவின் நிறைவேற்று செயலாளரினால் தனது அதிகார எல்லையை மிகைத்து 05 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தயாரித்து ரூபா 225,550 தொகை கொடுப்பனவு செய்திருந்தது. | உர வகைகளுக்காக வெவ்வேறாக காசோலைகள் வழங்கப்பட்டது என. | வரையறையை மிகைத்து கொடுப்பனவு செய்யும் போது கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பெரலிஹெல கமநல சேவை குழுவினால் மைலோ மீற்றர் செயற்படாத சய்ன் 504 டிரக்டர் வண்டி சாரதி என வெளித்தரப்பினர் ஒருவரை ஈடுபடுத்தி வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் | மைலோ மீற்றரை சரி செய்வதற்காக உதிரிப் பாகங்கள் காணப்படவில்லை எனவும், சாரதியுடன் உடன்படிக்கைக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் சரியான செய்முறைகளின் படி | இது தொடர்பாக முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையான உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருக்கவில்லை. டிரக்டர் வண்டியின் சாரதியினால் எரிபொருள் பெற்றுக் கொண்டு அந்த பில் பத்திரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட சிறிய திருத்த வேலைகளுக்கான பில் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் போது செலவு பில்பத்திரங்களுக்கான தொகையை வருமானத்திலிருந்து கழித்து சபைக்கு ஒப்படைத்திருந்தது. அதன் படி எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது மற்றும் திருத்த வேலை அலுவல்களுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 330,892 தொகை மற்றும் ரூபா 130,226 தொகை மேற்கொண்டிருந்த போதிலும் இது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்படுவதற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (இ) | அம்பலாந்தோட்டை கமநல சேவை குழுவின் இரண்டு சேமிப்புக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 50,121 இற்கான மீதிகள் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | வங்கியிலிருந்து உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக் கொண்டு மீதிகள் பதிவழிக்கப்பட்டது என. | அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கமநல சேவை குழுக்களின் ரூபா 167,355,451 தொகைக்கான சொத்துக்கள், 08 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 76,133,928 தொகைக்கான பொறுப்புக்கள் மற்றும் 02 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 1,112,643 தொகைக்கான வருமானக் கொடுக்கல் வாங்கல்களை மெய்மையாய்வதற்கு மற்றும் சான்றுறுதி செய்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 கணக்கு அறிக்கைகளில் சரியாக தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு தேவையான குறிப்புக்கள், அறிக்கைகள், ஆவணங்கள் உற்படுத்தும் படி பிரதேச உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூல அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்களை உறுதிப்படுத்தல் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | பிரிவு 51(1) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் ஒவ்வொரு பிரதேசத்திலும் கமநல அபிவிருத்தி சபை ஒன்று நிறுவுவதற்காக செயற்பட வேண்டியிருந்த போதிலும் 17 கமநல சேவை குழுக்களில் கமநல அபிவிருத்தி சபை நிறுவப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுரை கிடைத்திருக்காததுடன் அதற்கான அறிவுரை கிடைத்தவுடன் கமநல அபிவிருத்தி சபைகள் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | பிரிவுகள் 56(3) மற்றும் (4) | 09 கமநல சேவை குழுக்களின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,503,805 இற்கான நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டது என. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | 10 கமநலசேவைக் குழுக்களின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 | அம்பலாந்தோட்ட கமநல சேவை குழுவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 03 கமநல சேவைக் குழுக்களினால் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அறிவித்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலவதியாகிய ரூபா 17,631 தொகைக்கான 05 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | நிதிப் பிரமாணம் 454(2) | 08 கமநல சேவைக் குழுக்களில் மின்சார உபகரணம் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 880 | 15 கமநல சேவைக் குழுக்கள் பணம் அல்லது இருப்பு தொடர்பாக செயற்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களினாலும் பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்களினால் பிணை வைத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல சேவை ஆணையாளரின் 1981 ஒக்தோபர் 16 திகதிய 107 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | |
| | பிரிவு 03 (ஊ) | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் குறிப்பிட்ட கணக்கு ஏடுகளில் முறைப் பிரகாரம் மற்றும் உரிய நேரத்தில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 05 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறைப் பிரகாரம் உரிய நேரத்தில் கணக்கு ஏடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும் |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 754/9/05 (மெஹெ.பொ) இலக்கங் கொண்ட 2023 ஏப்ரல் 26 திகதிய கடிதம் | 03 கமநல சேவைக் குழுக்களின் சிறுகாசு கட்டுநிதி வரையறையாகிய ரூபா 20,000 இனை மிகைத்து 09 சந்தர்ப்பங்களில் ரூபா 252,400 தொகைக்கான சிறுகாசு கட்டுநிதி என பெற்றிருந்த 43 சந்தர்ப்பங்களில் சிறு காசு செலவு வரையறையை மிகைத்து ரூபா 359,540 தொகை சிறுகாசு செலவு என செலுத்தப்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட கடிதத்தின் படி செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டது என. | உரிய விதிகளும் ஒழுங்கு விதிகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 11 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுத்தொகை ரூபா 10,891,164 இற்கான மிகையொன்றும், 06 கமநல சேவை குழுக்களில் கூட்டுத்தொகை ரூபா 2,514,732 இற்கான பற்றாக்குறை ஒன்றும் 17 கமநல வங்கிகளில் கூட்டுத்தொகை ரூபா 6,517,427 இற்கான தேறிய இலாபம் ஒன்றும், காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குழுவின் அதிகாரப் பிரதேசத்தில் சிறு நீர்ப்பாசன குளங்களில் நீர் கொள்திறனை அளவை செய்வதற்கு வழங்கியிருந்த 80 நீர் உயர அளவுமானிகள் 04 கமநல சேவைக் குழுக்களினால் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்தி இருக்கவில்லை. | இந்த உபகரணங்கள் சிறு நீர்ப்பாசன குளங்களின் நீர் கொள்திறனை அளவை செலவிடுவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட உபகரணங்களை குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | வீரவில கமநல சேவைக் குழுவின் 2016 ஆண்டு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 273,234 இற்கான உர இருப்பொன்று காணாமல் போதல் தொடர்பாக உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் 2022 செப்தெம்பர் 13 திகதிய இலக்கம் 7/2/10/1855 கொண்ட கடிதத்தின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் பொறுப்பான உத்தியோகத்தரினால் அந்த நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தரினால் மேன்முறையீடு செய்திருந்தமையால் அறவீடு செய்ய முடியாமல் போனது என. | பொறுப்பான உத்தியோகத்தரிடம் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 444,024 இற்கான கிரயத்தை உடைய காலவதியாகிய விவசாய இரசாயன பொருட்கள், மரக்கறி விதைகள், விதைநெல், இரசாயன உரம் ஏனைய உரம் மற்றும் விவசாய உபகரண இருப்பு தொடர்பாக 04 கமநல சேவைக் குழுக்களினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இருப்புக்களை பதிவழிப்பதற்காக உதவி ஆணையாளரின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது என. | காலவதியாவதற்கு முன்னர் விற்பனை செய்வதற்கு அல்லது திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 கமநல சேவைக் குழுக்களினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,440,600 இற்கான சேதனப் பசளை 50353 கிலோகிராம்கள் மற்றும் மயுரபுர கமநல சேவைக் குழுவினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 44,850 தொகைக்கான 3450 கிலோகிராம் எப்பாவல ரொக்பொஸ்பேர்ட் (ERP) உரம் களஞ்சியத்தில் விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | அரசினால் பணம் செலுத்தப்பட்டிருந்தமையால் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குழுக்கள் இடையே மாற்றப்பட்டு விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | காலவதியாவதற்கு முன்னர் விற்பனை செய்வதற்கு அல்லது திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செயற்படாத பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | யோதகன்டிய கமநல சேவைக் குழுவினால் தனியார் கம்பனி ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த 18480 கிலோகிராமிற்கான் திண்ம சேதனப் பசளைக்கு உரிய ரூபா 369,600 இற்காக பணம் 2024 ஏப்ரல் 30 திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | பணம் அறவீடு செய்வதற்காக நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படும் எனவும் மற்றும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான 10 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், விற்பனை நிலையம் ஒன்று, சீசீடீவீ கமெரா முறைமையொன்று, 06 டிரக்டர்கள், 02 டிரக்டர் டேலர்கள், 01 இரும்புப் பெட்டி, 01 பெக்ஸ் இயந்திரம், 01 மோட்டார் சைக்கிள், 01 கலப்பை, சேதன கிளைகளை துண்டாக்கும் இயந்திரமொன்று சேதனப் பசளை உற்பத்தி இயந்திரம் 01 என்பன விளைவற்றுக் காணப்பட்டது. | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வாசஸ்தலங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்காக குழுவிடம் போதிய பணம் காணப்படாமையால் திருத்த வேலைக்கான செலவு மதிப்பீடு மற்றும் ஏற்பாடுகள் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்திலிருந்து வேண்டப்பட்டுள்ளது எனவும் ஏனைய சொத்துக்கள் தேவைப்பாட்டின் படி திருத்த வேலை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படும் என. | பயன்படுத்த முடியாத சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கும் ஏனைய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அப்புறப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 கமநல சேவைக் குழுக்களினால் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.14.1 இணங்காதவாறு 121 சந்தர்ப்பங்களில் ரூபா 5,410,281 இற்கான விதை நெல், காகிதாகிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ் வழுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான 196 பிரிவுகளுக்காக விவசாய ஆய்வு உற்பத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிட பிரிவுகளுக்காக பதில் கடமை நியமனங்கள் வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கமநல வங்கி அலுவல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல வங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கியிருந்த கடன் தொகைகளில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை ரூபா 61829,306 இற்கான செயற்படாத கடன் மீதிகள் மற்றும் வட்டி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன்தொகை மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு கமநல தீர்ப்புச் சபை தீர்மானத்தின் படி வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நெட்டொல்பிடிய கமநல வங்கியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 130,404 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை தீர்த்திருக்கவில்லை. | அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். |